

# இஸ்லாம் மித்திரன்.

# Islam Mittiran.

"லா இலாஹ இல்லல்லாஹ்
முஹம்மதுர் றஸூலுல்லாஹ்"

புத். 1. { அறப்ஹு 1312 ஜமாதுல் ஆகிர் மீ 2 உ வெ. கி. / இங்கிலீஷ் ஹு 1894 நவம்பர் மீ 30 உ வெ. கி } இல. 20.

## பூகம்பம்.

[சென்ற 19 இலக்கம் 151 பக்கத் தொடர்ச்சி.]

இங்கிலீஷ் 1783 ம் வருஷத்தில் கலேப்பிரியா என்னும் இடத்தில் உண்டான பூகம்பம் இரண்டே நிமிஷந்தான் இருந்தது. அது செய்த கொடுமையோ வெகு அதிகம். நாற்பதினாயிரம் ஜனங்கள் அழிந்து போயினார். நல்ல பல விருட்சங்கள் வளர்ந்திருந்த ஒரு பெரிய மேட்டுப்பாங்கில் கட்டியிருந்த பட்டணமும், அங்கிருந்த கற் கோட்டையும் இருந்த விடம் சிறிதும் தெரியாமல் விருட்சங்களோடு கூட விழுந்து அந்த ஸ்தானத்தில் ஐந்நூறு அடி நீளமும், இருநூறு அடி அகலமும் கோழி முட்டைபோல் வட்ட வடிவமாய் வாய் திறந்ததுபோல் ஒரு பெரிய மடு உண்டாயிருக்கின்றது. இந்த அதிர்ச்சி நாற்றிசையிலும் இருபத்திரண்டு மைல் தூரம் பரவினதாகவும், அது சென்ற மார்க்கத்திலுள்ள கிராமங்கள் பட்டணங்கள் யாவும் அழிந்து போகத்தக்க வேகமுள்ளதாயும் இருந்ததாம். பூகம்பத்துக்கு முன் அவ்விடத்திலேயே யிருந்து பழகியறிந்தவன்

மறுபடியும் அதைப் பார்க்கும்போது, அது தானு முன்னிருந்த இடம் அல்லவென்று சொல்லும்படியாய் அவ்வளவு வேறுபாடுகளை உண்டாக்கி விட்டது.

ஏறக்குறைய அறுபது வருஷத்திற்குமுன் ஓரிடத்தில் உண்டான பூகம்பத்தில் பதினாயிரம் பேர் அழிந்தார்கள். அந்தக் கம்பமானது ஒரு நிமிஷத்திற்குப் பதினாறில் ஒரு பங்கு காலந்தான் இருந்தது.

பெரு என்னும் தேசத்தில் 1746ம் வருஷத்தில் இருபத்துநான்கு மணி நேரத்தில் இருநூறு தரம் பூமி அதிர்ந்தது. பிரதான நகரமாகிய லிமா என்பது இருந்தவிடம் தெரியாமல் உருவழிந்து போய்விட்டது. கடற்கரையோரத்திலிருந்த கப்பல்களுள் பத்தொன்பது மூழ்கிப்போய்விட்டன. நான்கு கப்பல்கள் கரைக்கு அப்புறமுள்ள வயல்களில் செந்தூக்காய்த் தூக்கி எறியப்பட்டன. அவ்வூரிலிருந்த நாலாயிரம் பேர்களுள் இருநூறு பேர்மாத்திரம் தப்பிப் பிழைத்தார்கள்.

இவ்வாறு மனிதர்களுக்குக் கடலினும் தரையே பெரும் பகையாளியென்று தெரிவிக்கிற பூகம்பமானது என்ன காரணத்தினால் உண்டாகிறதென்று கேட்கலாம்? இதற்கு இந்துக்கள் ஆயிரந் தலைகளால் பூமியைத் தாங்காநின்ற ஆதிசேஷன் அப்போதுக்கப்போது பூமியின் கனத்தைப் பொறுக்க மாட்டாமல் தலைகளை அசைக்கிறானென்றும், தோள் மாற்றிக்கொள்ளுகிறானென்றும், அப்படி அசைக்கும்போது பூமி நடுங்குகிறதென்றும் சொல்லியிருக்கிறார்கள். இது யாவரும் பிரமாணமாய்க் கொள்ளத்தக்க ஒரு நூல் மூலமாய் நாம் அறிந்துகொண்ட அம்சமல்லாமற் போனாலும், இந்த அபிப்பிராயம் ஜனங்களுக்குள் இருந்துகொண்டிருக்கிறதென்பதற்குமாத்திரம் சந்தேகமில்லை. மற்றொரு தேசத்தார் இந்தப் பூகம்பம் தேவதையினால் உண்டாக்கப்படுகிறதென்கிற நம்பிக்கை வைத்துக்கொண்டிருந்தார்கள். இவ்விரண்டும் பிழையான கருத்துகளென்று இங்கே நாம் தெரிவிக்கவேண்டிய அவசியமில்லை. இக்காலத்திய புலவர்கள் பரிசோதனையின்மேல் ஏற்படுத்தியிருக்கிற சித்தாந்தத்தை இங்கே விரித்துச் சொல்வதற்குக் கூடாமையாயிருக்கிறது. பூமிக்குள் வெகு ஆழத்தில் அதி யுஷ்ணமான சில திரவ பதார்த்தங்கள் இருக்கின்றனவென்றும், அவைகள் அசையும்போது அப்படி அசைகிற பாகத்திற்கு மேலேயிருக்கிற பூமியும் அசைகிறதென்றும் இவ்வளவு சொல்லக்கூடும். இப்படிப்பட்ட பூகம்பம் எங்கேயாவது நேரிடாதவிடங் கிடையாதென்றும், வருஷத்திற்கு ஒரு முறை இரண்டு முறை உண்டாய்க்கொண்டேயிருக்கிறதென்றும் வர்த்தமான பத்திரிகைகளால் தெரியவருகிறது.

1874ம் வருஷம் மார்ச்சி மாசம் அமெரிக்காவில் ஸான்ஸால்விடார் என்னும் பட்டணம் பூகம்பத்தால் முழுதும் அழிந்துபோய், அதில் தப்பிப்

பிழைத்த குடிகள் தங்குமிடமில்லாமல் வழியற்றவர்களாய்ப் பிற ஊர்களுக்கு ஓடிப்போனதாய்ச் சமாசார பத்திரிகையால் தெரிய வருகிறது. ஆசியா கண்டத்தின் கீழ்த்திசையிலுள்ள ஜபான் தீவுகளிலும் இதே வருஷத்தில் வேகமான கம்பம் ஒன்று உண்டாகியதாம். அதனால் நேரிட்ட சேதம் இவ்வளவென்று இதுவரையில் தெரியவில்லை.

இவ்வாறான உற்பாதங்கள் பெருவாரிக் காய்ச்சல் முதலான கொள்ளை நோய்களைப்போலவும், ஊழிக்காற்று முதலியவைபோலவும், திடீர் என்று நடுக்கடலில் கப்பலுடைதல் முதலானவைபோலவும், ஒருங்கே அநேக ஆயிரம் பிராணிகளை நாசஞ் செய்யத்தக்க இயற்கைக் கருவிகளுள் முக்கியமானவை என்று சொல்லலாம்.

இனி பூகம்பத்தைக்குறித்து அறி கள் என்னசொல்லுகிறார்களென்று மறு விஷை சிலவற்றைச் சொல்வோம்.

## மவ்துப்பதார்த்தம்பாவிப்பார்க்கொரு வார்த்தை.

தற்காலம் ஊரெங்கும் பரந்து பல சாதிகளையுங் கெடுத்து மோட்ச வழியைத்தடுத்து மோச வழியில் நடத்தவந்திருப்பது வெறிப்பதார்த்தமென்னுங் கொடிய வியாதியேயாம். கள்ளுக்குடி, சாராயக்குடி, பிறாண்டிக்குடி, உவையின்குடி, போன்றவை. பேடு, சப்ஜி, கஞ்சா, இலாகிரி லேகியம் அபின், முதலியவைகளுங் குடிகெடுக்குங் குடிவகையேயாம். பல மதங்களுங் குடியை விலக்கினாலுங் கிறிஸ்து மதம் குடியை மத யேற்பாடாகப் பாவிக்க விடங் கொடுக்கிறது. ஆதலால் கிறிஸ்தவர்களே குடிக்குரியவர்களென்பது அவர் மத அத்தாட்சியேயாம். கிறிஸ்தவர்களுடைய கொண்டாட்டங்களுக்குப் பிரதானமாய் குடியையே பாவித்து வருகிறார்கள். எந்தக் கோவிலுக்குப் போகும்போதுந் தவறணைச் சாமியாரைக் கண்டு காணிக்கைவைத்துப் பூசைமுடித்துக்கொண்டுபோகாதார்மிகச்சிலர். இதை நாம் கண்டுங் கேட்டுமிருக்கின்றோம். புத்தர்கள், இந்துக்கள் தங்கள் தேவாலயங்களுக்குச் செல்லும்போது குடிப்பதை நாம் காணவுமில்லை கேட்கவுமில்லை. இப்படிச் செல்வதால் நாம் கிறிஸ்தவர்களை யிழிவாய்ப் பேசுகிறோமென்று நம்பவேண்டியதில்லை. நாம் அவர்களிற் சிலரின் நடவடிக்கை பழக்க வழக்க முதலியதைக்கண்டறிந்து எழுதுகிறோம்.

பைபிலை யெழுதிய அல்லது திருத்தியவர்கள் அல்லது பாதிரிமார்கள் இடங்கொடுத்தாலும், அவர்களில் சிலர் குடி விலக்குச் சபையென்று சபைகளை யுண்டாக்கி மது பாவித்தலைத் தடுத்து வருகின்றார்கள். இந்தியா முதலிய கீழ் தேசத்தவருக்கு மது பாவித்தலை யார் பழக்கி வைத்தார் என்பது பின்வருஞ் சங்கதியால் விளங்க வரும்.

கிறிஸ்தவப் பாதிரிமாகளுக் கெல்லாந் தலைவராகிய கா[illegible]

என்பவர் லண்டனில் ஓர் கோயிலில் பிரசங்கஞ் செய்யுங் காலத்தில் "குடிவெறியையும் விபசாரத்தையும் கீழ்தேசவாசிகளுக் கிடையில் பரப்பினவர்கள் கிறிஸ்தவர்களே" என்று பிரசங்கித் திருக்கிறதாகச் சிலகாலத்துக்குமுன் வெளியான "லண்டன் டைம்ஸ் பத்திரிகை கூற நாம் கண்டிருக்கிறோம். கிறிஸ்துவின் இரத்தமென்று உவையின் சாராயத்தைக் குடியுங்களென்று கிறிஸ்தவர்களின் சமயப் புத்தகத்திலே கூறப்பட் டிருக்கின்றது. இத்தாதி காரியங்களால் குடிவகை கிறிஸ்தவர்களுக்கே சொந்தமானதென்று தெரியவருகிறது. இதைப் பற்றி விவரிக்க ஒருவருமறியாத காரியமல்ல. ஆகையால் அது அம்மட்டிற் கிடக்க.

எங்களுடைய "இஸ்லாம்" என்னும் முத்தி மார்க்கச் சட்டப் பிரமாணப்படி, கள்ளு சாராயங் குடிப்பது "ஹறாம்" (வேத விலக்காம்.) அதைக் குடிப்பவன் பெரும்பாவி யாவான். குடிவஸ்தை "ஹலால்" (ஆகுமானது) என்று எவனொருவன் கண்டானேயாயின் அவன் "காபிர்" (நாயனுக்கும் நபிக்கும் வழிப்படாத புறச்சமயியாயிடுவான்) கள்ளுச்சாராயம், பிறண்டி, உவையின் முதலிய மயக்கத்தைவருத்துகின்ற எல்லாவகை குடிப்புகளும் தீன் பதார்த்தங்களும் எங்களுக்கு விலக்கப்பட்டதாயிருக்கின்றன. இவைகள் "நஜீஸ்" அசுத்தம். புடைவைகளில் பட்டால் கழுகிறது "வாஜிபு" (கடமை.) அதைக் கழுகாது உடுத்தித் தொழுதால், தொழுகை கூடாது. இப்படிப்பட்ட நஜீஸான குடிப்பை குடிப்பவனும் ஒரு நஜீஸானவனாகத்தானிருப்பான். ஊமத்தம், கஞ்சா அபின் முதலியவைகளைக் கலந்து செய்யும் இலேகியங்களுங் குடிவஸ்துக் கொப்பாகவே யிருக்கின்றன. குடிவஸ்தைப்போல லேகியமுந் தற்காலத்தில் அனேக மோசநாசங்களை யுண்டாக்கிக் கொலைபாதகங்களையும் வருத்தி யிருக்கிறதாகச் சமாச்சாரப் பத்திரிகைகளால் அறிகிறோம். லேகியம் சாப்பிடுவது மார்க்க விலக்கான காரியமாயிருந்தும் அனேகர் அதை வழக்கப்படுத்தியே பாவித்து வருகிறார்கள். மயக்கத்தை வருத்துகிற வஸ்து கொஞ்சமாயிருப்பினும் அதைப்பாவிக்கப்படாதெனக் கூறப்பட்டிருக்கிறது. எங்கள் இரட்சக நாயகர் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவாய் மலர்ந்து "மயக்கத்தை வருத்துவிக்கும் குடிப்புகள் சகலதும் விலக்கப்பட்டவைகளாம்" என அருளியிருக்கின்றார்கள். இவ்வாக்கியத்தை உய்த்துணர்ந்து ஆராயுங்கால், சப்ஜி, கஞ்சா, லேகியம் எல்லாம் விலக்கானதென்பதாய் விளங்கவிடமாகின்றன.

இன்னும் எங்கள் நாயகர் திருவாய் மலர்ந்து "ஒருவன் கள்ளுக்குடித்தானகில் அவனுடைய ஹிருதயத்தை விட்டு "ஈமான்" விஸ்வாசத்தின் பிரபை வெளிப்பட்டுவிடும் எனவும் இன்னும், குடிகாரன் அவன் செய்த பாவத்தைக் குறித்து மனஸ்தாப் பட்டு "தவ்பா" (பாவ சங்கீர்த்தனஞ்) செய்து நாயகனிடம் மன்னிப்புக்

கொள்ளாமல் மரணிப்பாருயின், விக்கிரகாராதனைக்காரன் நாயனைச் சந்திக்கிறதுபோல அவனுஞ் சந்திப்பான் எனவுந் திருவுளம்பற்றினார்கள். இதன் கருத்தாவது குடிவெறியினு லிறந்தவனும் விக்கிரகாராதனைக்காரனின் பாவத்தி லொப்பானவன் என்பதுவாம்.

மேலே எழுதப்பட்ட இரண்டொரு திருவாக்கியங்களைமாத்திரமே இப்பொழுது நாம் எடுத்துக் கூறினோம். இதைவிட்டு நாம் அதிகங் கூறப்புகின் எம்பத்திரிகை வேறு விஷயத்திற்கு இடம்பெருது. ஆதலின்; தருணம் வாய்க்கும்விதம் சிறுகச் சிறுக எழுதுவோம். எங்கள் முஸ்லிம்கள் தொன்றுதொட்டே குடிவஸ்தை வெறுத்து மார்க்கச் சட்டப்படி நடக்கிறவர்களாயிருக்கின்றார் என்பது புறமதத்தவர்கள் தாமும் அறிந்த காரியந்தானே. அப்படியிருக்க, ஒருவன் கள்ளுச்சாராயம் முதலிய குடிகளைக் குடிக்கிறவன் வெளிகோலத்தில் முஸ்லிம்களின் உடையைத் தரித்திருந்தாலும் நிச்சயமாக அவன் முஸ்லிமாகமாட்டான். சூது விளையாடுகிறவர்களு மிதுபோலவேதான். நாயனும், நபி அவர்களும் விலக்கியதைச் செய்பவன் எப்படி இரட்சிப்படையப் போகிறான். இரட்சிப்பில்லாதவன் முஸ்லிம் என்ற பட்டத்துக் குரியவனல்ல. இதற்காதாரமாக மேலெழுதிய திருவாக்கியங்களே சாட்சியமாம்.

மஸ்துப் பாவிப்போர் கெட்ட கேட்டையும் பட்ட பாட்டையும் என்னென்று சொல்வோம்! வெறியினால் எத்தனையோபேர் என்னென்ன கேடு கெட்டார்களென்றும், எவ்வளவோ பணஞ் செலவிட்டார்களென்றும், மீளாக்கடன் பட்டார்களென்றும், இரந்துண்ணுமோடு தொட்டார்களென்றும், இழிவினால் உயிர் விட்டார்களென்றும், பல்முறையுங் கேட்டுங் கேளாதார்போலும் கண்டுங் காணாதார்போலும் சிலர் கஞ்சாக் கரிமரைகளைத் தேடுவதும், அங்கொழித் தோழித் தேடுவதும், குடித்தபின் படுப்பதும், தங்கள் வீடு சென்று சண்டைபிடிப்பதும், பெண்டீர் பிள்ளைகளை அடிப்பதும் அவர்கள் சங்கையைக் கெடுப்பதும், அயலார்க்குத் தொந்தரை கொடுப்பதும், வீணிலே பகைதொடுப்பதும் பலமுறையிலும் மனப்பரிதாபத்துடன் பார்த்துங் கேட்டுமுண்டு, கானகத்தில் வாழும் கரடி, புலி, மதயானை, காட்டுமான் கோட்டெருமை முதலிய விலங்குகளில் சில, தந்திர மந்திர யுத்தியாலே வசமாயினும் இந்தக் குடியருடைய கொடிய மனது எந்தக் கடின மொழிகளாலும், நன்மதிகளாலும், அரசாட்சியார் விதிகளாலும் மாறுவதையும் குடிவெறியால் மீளுவதையுங் காணோம். இவர்களுடைய கெட்ட மனதைத் திருத்தி நற்புத்தியுண்டாகும்படி நாயனே உதவி செய்தருளவேண்டியது.

# இமாம் அபுல்ஹஸன் சாதுலி றஹ்மஹுல்லாஹ் அவர்கள் சரித்திரம்.

[சென்ற 19 மிலக்கம் 153ம் பக்கத் தொடர்ச்சி.]

செய்கு நாயகம் ஸெய்யிதினா அபுல்ஹஸன் சாதுலி றஹ்மஹுல்லாஹ் அவர்கள் அற்புத மார்க்கமாகத் தருவித்துக்கொடுத்த கிருபத்தை மிஸ்று தேசத்தரசர் உடைத்துப் பார்க்கும்போது அதில், தேவதுதி ராஜதுதிமுதலியனவழக்கப்படிவரைந்தபிறகு, கனியும், மேன்மையும், சங்கையும், மகத்துவமும் பொருந்திய இமாம் சாதுலி அவர்களைக் குறித்து அதி மேன்பாடாக எழுதியிருந்தது. இதை வாசித் தறிந்த மிஸ்று சுல்தான் தமது எண்ணத்திற் கொண்டிருந்த சந்தேகத்தை நிவிர்த்தி செய்து மனச்சுத்தமாய், நல் லெண்ணங் கொண்டவராயிருந்தார். குத்பு நாயகமும் அவ்விராச சமூகத்தால் நீங்கி மிஸ்றிலோர் பகுதியி லிருந்தார்கள்.

மறுபடியும் சில துரோகிகள் இவர்கள் இரசவாதக் காரரென்றும், கள்ள நாணயங்கள் செய்கிறார்களென்றும், தேச சமாதானத்தைக் கெடுத்து ராஜ பக்தியை இன்மையாக்கும் கலகக்காரரென்றும், பலவித உண்மைக்கு மாறாகிய தப்பு வார்த்தைகளை சாதுலி ஆண்டவர்களுக்கு மாறாகப் படராய்க் கட்டிச் சில அகாமக்கடிதங்கள் மிஸ்று ராஜனுக்கு அனுப்பியிருந்தார்கள். இதனால், சந்தேகந் தெளிந்திருந்த மனதில் கலங்கமுற்று பெயர்த்தும் ஐயமுற்றார். இவ்வரசன் பூரண அறிவுடையவரா யிருந்தால் இந்த அனாமக் கடிதங்களால் தமது மன நம்பிக்கையை ஐமிச்சத்தில் விடார். அல்லாஹுத்தஆலாவின் நபிமார்களுக்குப் பகைஞர்க ளிருந்தது போல வலிமார்களாகிய மஹாத்துமாக்களுக்கும்பகைஞர்களிருப்பார்களென்பதை இவ்வரசர் கிஞ்சித்தேனு முணர்ந்திருப்பாராயின் சாதுலி நாயகம் அவர்களில் கொண்டிருந்த நல்லெண்ணத்தைப் பிசகவிடார் என்பது நிச்சயம். இந்த ராஜன் சங்கதி அப்படியாக, அவரின் பொக்கிஷத்தலைவர் காரணமாக நடத்தப்பட்ட வோர் அற்புதத்தைப் பேசுவோம்.

இன்னும் ஒரு தினம், மிஸ்று அரசாங்கப் பொக்கிஷக்கார பாத்துசர்வுக்கு நிகழ்ந்த சங்கதியைக் கூறுவோம்.

முன் சொல்லப்பட்ட மிஸ்று அரசரின் பொக்கிஷத் தலைவராகிய முஹம்மது இப்னுகலாவூன் என்னும் பண அதிகார உத்தியோகத்தர் ஓர் பாரதூரமாகிய குற்றத்தைச் செய்துவிட்டு அரசர் தம்மைத் தக்கபடி தண்டிப்பார் என்று பயந்து ஓடிப்போய்விட்டார். அப்போது சாதுலி ஆண்டவர்கள் இஸ்கந்தரியாப் பட்டணத்தில் இருக்கின்றார்களென்பதைக் கேள்விப்பட்டு, நாயகத்தின் திருச்சமுகந் தேடிப்போ

ய்ப் பாத தாமரையிற் பணிந்து தம்மைக் காக்கும்படி பிரார்த்து அடைக்கலம் புகுந்தார். அஞ்சி வந்தவரை நாயகம் ஆதரித்துக்கொண்டு தங்கள் சிஷ்யர்களாகிய தபோதனர்களோடு இருந்து நாயனை வணக்கஞ்செய்யும்படி ஆக்ஞாபித்தார்கள். இவ்வாறு முஹம்மது இப்னுகலாவூன் என்பவர் குத்பு நாயகத்திடம் வந்து அடைக்கலம் புகுந்திருப்பதை மிஸ்று ராஜா கேள்விப்பட்டார். அப்படிக் கேள்விப்பட்ட அரசர் தமது தூதர்களிலொருவரையழைத்து ஒரு நிருப மெழுதி அபுல்ஹஸன் சாதுலி இமாம் அவர்கள் திருச்சமுகங் கொடுக்கும்படி அனுப்பிவைத்தார். அந்தக்கடிதத்தில் அரசாங்க பொக்கிஷப் பணங்களை மோசஞ்செய் தோடின குற்றக்காரனைச் சிட்சைசெய்யவிடாது வைத்துக்கொண்டது என் அரசாட்சிக்குக் கேட்டை வருத்துகிறதற்கு துணிந்ததுபோலிருக்கின்றது, என் பொக்கிஷத்தலைவனைத் தாங்கள் வைத்துக்கொண்டது நியாயமல்லவென்றது போல சில சங்கதிகள் அடங்கியிருந்தன. தாமரைத்தடாகத்தில் வாழும் தவளையானது அத் தடாகத்தி லிருக்கும் தாமரைப் புஷ்பத்தி லிரா நின்ற தேனின் இன்பத்தை யுணராதது போல, அவ்வரசனும் இம்மகத்துவ நாயகத்தின் மகிமையை விளங்கி அறியுஞ் சக்தியற்றதால் இவ்வாறு கோபத்தீயால் கரிக்கப்பட்ட அற்பமதியால் எழுதியிருக்கலாம். அஃதன்றி அறிவு பூரணமுடைய ஒருவர் பெருமையிற் சிறந்த நாயகர்களுக்கு ஒரு அட்சரமேனும் மனவிதனமுறவெழுதார். அறிவால் சிறியவர்கள் செய்யும் ஒரு குறைக்கருமத்தை ஞானத்தால் நிறைந்த பெரியோர் குறைவாக எண்ணாது பொறுத்து மேலுங் கருணை புரிவதுபோல, குத்பு நாயகம் அவர்களும் தங்களுக்குக் கொடுக்கப்பெற்ற கடிதத்தைப் பார்த்து கோபங் கொள்ளாது சாந்தமும் இரக்கமுமுற்று, ஆ! நாம் மனிதர்களைக் கெடுக்கிறவர்களல்லவே, ஆனால், கேட்டைத் திருத்தி நேர்பாதையில் வழி காட்டுவதே நமது வழக்கமாயிருக்க, இவ்வரசன் குறித்தது நமக்கல்ல, வென்று சொல்லிக்கொண்டு, அவர்களிடம் அடைக்கலம் புகுந்த பொக்கிஷ தாரியைக் கூப்பிட்டு, இதோ எதிரே இருக்கிற கருங்கல்லின்மேல் ஜலபாதைக்கிரும் என்று கற்பினை செய்தார்கள். உடனே அவர்போய் உத்தரவுப்படி, ஜலபாதைக்கிருந்தமாத்திரத்தில், அக்கல் து தங்கமாய்ச் சமைந்தது.

இன்னும் வரும்.

## மெய்ஞ்ஞான விளக்கம்.

[சென்ற 19 மிலக்கம் 157 பக்கத் தொடர்ச்சி.]

மனுக்குலத்தவரில் தன் அந்தியகாலத்தைச் சிந்திக்காது ஏமாந்திருக்கிறவன் உருவத்தில் மனுஷனாயிருப்பினும் வருக்கத்தில் விலங்கினமாயிருப்பான். தனக்கு ஒரு முடிவுகாலம் வரும் என்கிறதை மாடுகள் அறியாததினாலே அதுகள் அவ்வளவுகொழுத்துப் பருக்கின்றனவென்று அறிவுக்கடலாகிய இமாம்கஸ்ஸாலி றஹ்ம

றஸூல்லாஹ் அவர்கள் அருளியிருக்கின்ற வாக்கியம் உதாரணமாகின்றது. இன்னும் அந்த நாயகம் அவர்கள் சொல்லுகிறதாவது, "எங்களுடைய செய்குனா றஸூலுல்லாஹ் என்னை விளித்து, நீ காபிர்களுடைய நிலைபரங்களையும், அவர்கள் நரகத்தில் நீடிகாலம் தரிபடுகிறதையுங் கேட்கிறபடியால், நீ உன்னிமேல் அச்சந்திடாதே, ஏனெனில், காரியம் மெத்த வருத்தத்திலிருக்கின்றது, உன்னுடைய ஒடுக்கம் என்ன நிலைபரத்தில் முடியுமென்றும், மறைவாகிய தீர்ப்பில் உனக்கு என்ன தீர்மானம் முந்தி தீர்ப்பிடப்பட்டிருக்கிறதென்றும் நீ அறியமாட்டாய், இன்னும் காலந் தெளிவாயிருப்பதைப்பற்றியும் மருண்டிடாதே, அந்தத்தெளிவின் கீழ் கலக்கம் உண்டாயிருக்கின்றது ஆனதுபற்றி நீ அச்சந் தீரந்திராதே என்று எனக்குச் சொன்னார்கள்."

ஆசாரத்துக்குரிய இஸ்லாம் மித்திரர்களே! மேலே வரையப்பட்ட சங்கதியினால் அச்சந்தீர்ந்து கிடக்கலாகாதென்பது நன்கு புலப்படுமல்லவா? இவைகளை நீங்கள் சித்த சமாதானத்தோடாராய்ந்து பார்ப்பீர்களானால் நீங்கள் கிடக்கின்ற மருட்சி எனனும் நித்திரையால் விழித்துக் கொள்வீர்கள்.

நாயகம் சஸ்த்தான் இப்னு இப்னு அத்துநம் றஸூல்லாஹ் அவர்களிடம் ஒருபெரியவர் எனக்கு உபதேசஞ்சொல்லுங்கள் என்று ஆவலுற்றுக்கேட்டார், அப்போது அந்நரு அவர்கள், நீர் மரணத்தை மறக்காமல் எப்போதும் உமது இருதயத்தில் ஞாபகப்படுத்திவருவீராக, அப்படியிருக்கிறது எல்லா[illegible]சங்கதிகளுஞ் சுருக்கமும் பிரயோசனமுமானது. பூலோகத்தில் எத்தனை காலமிருந்தாலும் மரணிப்பது நிச்சயம். அப்படி மரணிக்கவிருக்கிற மனுஷன் அதற்கு எவ்வேளையும் ஆயத்தமாகவிருக்கவேண்டியது கடமையே என்று இப்னு இப்னு அத்துனம் றஸூல்லாஹ் உபதேசித்தார்கள். புத்திரர்களா! இப்படிப்பட்ட மெய்ஞ்ஞான பக்தர்களும் தேவ மகத்துவ சிகாமணிகளுமாகிய "வலி" மார்களின் உபதேசங்களிலெல்லாம் முடிவு காலத்தைக் குறித்துச் சிந்தைசெய்வதையே மேன்பாடாய்க் கூறப்பட்டிருக்கின்றன. இப்புவியில் இதை மறந்து கிடக்கிற மனுஷன அற்ப சொற்ப விஷயங்களுக்காக அபரூபமாகிய "ஈமான்" விசுவாசத்தையும், அவ்விசுவாசத்தைப் பிரகாசிக்கச் செய்யும் தீப வொளியாகிய நல் வணக்கங்களையும் இழந்தவனாய், தென் இந்தியாவில் சில சிற்றூர்களாகிய கோட்டாறு முதலிய மாகாணங்களிலிருந்து வரும் மோட்டாத்துமாக்களிடம் குருட்டு உபதேசம்பெற்று வழி தவறி கிடக்கின்றனே. கோட்டாற்றிலிருந்து இந்தக் கொழும்புக்கு வந்து உபதேசங் கொடுத்திருக்கிற சாகிபு மார்களின் சரித்திரங்களைபற்றிக் கொஞ்சம் எழுதவேண்டியதாகத்தானிருக்கிறது, இவர்கள் முஸ்லிம்களின் ஈமானைப் போக்கும் புல்லுருவிகளாயிருப்பதுல் முஸ்லிம்கள் இவர்களின் கைகளைத் தொட்டு (ஸல்லத்) வழி கேட்டில் ஆசாமல் கார்மானந் தேடிக்கொள்ளுகிறதற்காகவே. இப்போது கொழும்பில் கம்பனித்தெருவில் இந்தக்கோட்டாற்று வெண்டிக சாகிபு மார்களின் புரளியோ மெத்தப் பெரிதாயிருக்கின்றது. பலாதுகளெல்லாம இப்பாதகாகளாலே நடத்தப்படுகின்றது. அல்லாஹ் றஸூலைக் கொஞ்சமாவது பயப்படாது காசுக் குபதேசங் கொடுத்து மோசஞ் செய்கிறார்களே! ஆ! ஆ! இவர்களின தோஷத்தைவிட்டும் முஸ்லிம்களைக் காப்பாற்றுவாராக.

இன்னும் வரும்.